செ.வெ.எண்: 151 நாள்: 19.02.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் காரீப் கொள்முதல் பருவம் 2019-2020 நெல் அறுவடை துவங்கியிருப்பதால், விவசாயிகள் அதிக அளவில் பயன் பெறும் வகையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய ஏதுவாக, கறம்பக்குடி வட்டம், பந்துவாக்கோட்டை கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் எதிர்வரும் 24.02.2020 முதல் திறக்கப்பட உள்ளது.

எனவே, விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல்லினை தங்கள் கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன் பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**